கின்ற யோசனை அரசிற்கு இருக்கிறதா ? திண்டுக்கல் பகுதியில் அதிகமாக மல்லிகைப் பூ பயிரிட்டு வருகிறார்கள். அங்கு இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதைக்குறித்து பரிசீலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த ஆத்தூர் தொகுதியில் அதனை அமைக்கின்ற வகையில் அவர் சொன்ன யோசனைகளை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தினால்—நேஷனல் கோ-ஆப்பரேட்டிவ் டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன்—உதவியுடன் முப்பது இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலையை அமைக்க துடிய லூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கம் கோ-ஆப்பரேட்டிவ் அக்ரி கல்ச்சுரல் சர்வீஸ் சொசைட்டி—மூலமாக நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமாக மல்லிகைப் பூ விளையக் கூடிய சேலம் மாவட்டத்தில் பனைமரத்துப்பட்டியில் வாசனை தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ? பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய எந்த விவரமும் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை.

* வினா எண் 489—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் துவங்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருள்கள் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

1981 மார்ச் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தஞ்சாவூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி தொழிற் கூட்டுறவு சங்கம் அதன் உறுப்பினர்களாக உள்ள 106 தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்களையும் வினியோகிக்கின்றது. எந்த மூலப்பொருளும் கிடைக்கவில்லையென சங்கத்திலிருந்து முறையீடு வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இதனால் ஏறத்தாழ ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எப்போது இந்த மூலப் பொருள்கள் கிடைக்கும் என்று அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூலக்கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் அரசுக்கு மூலப்பொருள்கள் பற்றாக்குறை என்று முறையீடுகள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். விவரங்கள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத் திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற் சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பது கேள்வி. பொதுவாக ஆறு மாதத்திற்கு முன்பு அந்த மூலப்பொருள்கள் கிடைக்காமல் இருந்தது உண்மைதான். இந்த மூலப்பொருள் கள் கிடைப்பதற்கு அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்ப தாக அறிகிறேன். தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் பகுதியில் சிறிய கூட்டுறவு தீப்பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது. அதற்கு அரசு மூலம் உரிமங்கள் வழங்குவதற்கு ஏறத்தாழ ஓராண்டு காலமாகியும் வழங்கப்படாத காரணத்தால் தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உரிமங்கள் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதிலில்லை)

திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குக் குளோரைட் தயாரிக்கிற தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆங்காங்கு

[1981 மார்ச் 26

சில நேரங்களில் கூட்டுறவு முறையிலே நடக்கிற தொழிற்சாலை களுக்குக் குளோரைட் சரியாகக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே குளோரைட் தயாரிக்கிற தொழிற்சாலைகளிலிருந்து கூட்டுறவு முறையிலே இயங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு முதலில் வழங்கிவிட்டு, பின்னர் தனியார் தொழிற்சாலைகளுக்கு வழங்கவேண்டுமென்று இந்த அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

சைதாப்பேட்டை சாயத் தொழிற்சாலை.

*வினா எண் 490—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-சைதாப்பேட்டையில் சாயத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, சைதாப் பேட்டையில் ஏறக்குறைய 20 ஆயிரம் பேர்கள் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 10 ஆயிரம் பேர்கள் நிரந்தர வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருந்தொகை முதலீடு செய்ய வேண்டியதில்லை. அங்கே உள்ளவர்கள் தற் போது அனகாபுத்தூர் போன்ற இடங்களுக்குச் சாயத்தைத் துவைப்பதற்காகச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே சைதையில் சிறிய சாயத் தொழிற்சாலை அமைப்பது குறித்து இப்போது இல்லாவிட்டாலும் பின்னராவது ஏற்படுத்த முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஏற்கெனவே சைதா பேட்டையிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே ஒரு சாயத் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலே 168 சாயத் தொழிற்சாலை கள் தமிழ்நாட்டிலே ஆங்காங்கே நடந்து வருகின்றன. இதைத் தவிர பெரிய அளவிலே 90 இலட்சம் ரூபாய் செலவிலே 7 சாயத் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிலே 4 முழுமைபெற்று பணியைத் துவங்கியிருக்கின்றன. 3 இன்னும் ஓராண்டிற்குள் பணியைத் துவங்க இருக்கின்றன.